# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

## O.S.NO.95/2022

**Deposition of Witness : PW - 1**

**Name** : சகுந்தலா

**Husband Name /W/o** : சாந்தோணி

**Religion** : இந்து

**Caste** : -

**Calling** : -

**Address** : அரிகிலபாடி கிராமம், அரக்கோணம் வட்டம்.

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 19.09.2023.**

குறுக்கு விசாரணை :-

1. வீடு இருக்கும் இடம் கிராம நத்தம் புறம்போக்கு என்றால் இல்லை. பட்டா இடம் ஆகும். அதன் பழைய சர்வே எண்.59/1பி, புதிய சர்வே எண்.59/1பி பார்ட் என்றால் ஆம். செல்வராஜ் என்பவர் பாரதிராஜவிற்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. செக்குந்தி தெரியுமா என்றால் கிழக்கில் முனியம்மா வீடு, தெற்கில் கஸ்தூரி வீடு, வடக்கில் சுசீலா வீடு, மேற்கில் ரோடும் உள்ளது. வழக்கு போட்டுள்ள இடத்திற்கு பக்கத்தில் தான் என்னுடைய வீடு உள்ளது என்றால் ஆம். ஜோதி வீடும், தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ளது என்றால் ஆம். தாவா சொத்து என்னுடையது இல்லை என்றால் சொத்து என்னுடையது ஆகும். தாவா சொத்து அருகே குடும்பங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த குடும்பங்களுக்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எனக்கும் பட்டா கொடுத்தள்ளார்கள். நானும் பிரதிவாதியும் தனித்தனியாக அனுபவிக்கிறோம் என்றால் அந்த வீடு என்னுடையது.

(வழக்கறிஞர் வேண்டுகோளிற்கினங்க கு.வி.தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது)